முதலாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், சேலம்

முன்னிலை: திரு. என். ராமகிருஷ்ணன், பி.ஏ., பி.எல்.,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.

2025–ம் ஆண்டு மார்ச் மாதம் 11ம் நாள் செவ்வாய்கிழமை

இடைநிலை மனு எண். 1/2025
in
மேல்முறையீட்டு வழக்கு எண். 34/2009

ராஜம்மாள் ... மனுதாரர்/2–வது மேல்முறையீட்டாளர்

//எதிர்//

1. வரதராஜு
2. கண்ணையன் (இறந்து விட்டார் ) வரதரு ..... 1, 2 –எதிர்மனுதாரர்கள்/1, 2 எதிர் மேல்முறையீட்டாளர்கள்

3. ஜடல போயன் (இறந்து விட்டார் )
4. தாயம்மாள் (இறந்து விட்டார் )
5. ராஜு (எ) மாரிமுத்து
6. சின்னபொண்ணு (இறந்து விட்டார் )
7. ராஜம்மாள் (இறந்து விட்டார்)
8. செல்லம்மாள்
9. அசோகன்
10. தீனதயாளு
11. தனகொடி (இறந்து விட்டார்)
12. தர்மலிங்கம்
13. மணி
14. விஜயா
15. பழனியம்மாள்
16. அங்காயம்மாள்
17. கண்ணம்மாள்
18. செல்வம்
19. கீதா
20. ராஜம்மாள்
21. தட்சிணாமூர்த்தி
22. சதாசிவம்
23. கண்ணம்மாள்

24. சந்திரா
25. விமலா .... 3 முதல் 25 எதிர்மனுதாரர்கள்/3 முதல் 25 எதிர் மேல்முறையீட்டாளர்கள்
26. விஜயலட்சுமி .... 26–வது எதிர்மனுதாரர்/முதல் மேல்முறையீட்டாளர்

இந்த மனு 26.02.2025 தேதி என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.முருகன் அவர்கள் முன்னிலையாகியும், 1–வது எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. B.ரமேஷ்குமார் அவர்கள் முன்னிலையாகியும், மற்ற எதிர்மனுதாரர்கள் மேல்முறையீட்டு வழக்கில் தோன்றாத் தரப்பினர்களாக கருதப்பட்டும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்து, இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்:–

## உத்தரவு

மனுதாரர்/2–வது மேல்முறையீட்டாளர் உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் கட்டளை 1 விதி 10 (1) (2) –ன்கீழ் மேல்முறையீட்டு வழக்கில் உள்ள முதல் மேல்முறையீட்டாளரை 26–வது எதிர்மனுதாரராக மாறுதல் செய்ய அனுமதிக்ககோரி மனு தாக்கல் செய்துள்ளார்.

2. <u>மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆணையுறுதி ஆவணத்தில் கூறப்பட்டுள்ள சங்கதிகளின் சுருக்கம் பின்வருமாறு:–</u>

சேலம், முதன்மை சார்பு நீதிமன்றம் அசல் வழக்கு எண்.615/1981 – என்ற வழக்கில் இடை நிலை மனு எண். 98/2000– என்ற மனுவில் 29.04.2009 தேதியில் பிறப்பிக்கப்பட்ட இறுதிநிலை தீர்ப்பாணையை எதிர்த்து மனுதாரரால் மேல்முறையீட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. முன்னதாக இந்த மேல்முறையீட்டு வழக்கு

இந்நீதிமன்றத்தால் 10.11.2010—ம் தேதி மீட்டனுப்புகை (Remand) செய்யப்பட்டது. அந்த உத்தரவுக்கு எதிராக 1—வது பிரதிவாதி மாண்புமிகு மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தில் CMA.No.2687/2011 என்ற வழக்கை தாக்கல் செய்தார். மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தில் மேற்படி CMA.No.2687/2011 – வழக்கில் ஆணையர் நியமிக்கப்பட்டு அவரது அறிக்கையும் பெறப்பட்டது. மாண்புமிகு மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தில் மேற்படி வழக்கில் ஆணையர் தாக்கல் செய்த அறிக்கைக்கு தெரிவித்த ஆட்சேபனைகளை பரிசீலிக்குமாறு கூறி, வழக்கை இந்நீதிமன்றத்திற்கு மறு விசாரணைக்காக அனுப்பப்பட்டது. முதல் பிரதிவாதிக்கும் 21 முதல் 25 வரையிலான பிரதிவாதிகளுக்கும் கூட்டாக 1/2 பாகம் உரிமையுடையவர்கள் ஆவார்கள். மேல்முறையீட்டாளர்களுக்கும் மற்ற பிரதிவாதிகளுக்கும் 1/2 பாகம் உரிமையுடையவர்கள் ஆவார்கள். முன்னதாக இரு தரப்பினரும் சமரச மனு தாக்கல் செய்தனர், ஆனால் முதல் மேல்முறையீட்டாளர் சமரச மனுவில் கையெழுத்திட மறுத்துவிட்டார். மேலும் வழக்கை தொடர்ந்து நடத்துவதையும் தவிர்த்து வந்தார். எனவே, மேல்முறையீட்டு வழக்கில் உள்ள முதல் மேல்முறையீட்டாளரை 26—வது எதிர்மனுதாரராக மாறுதல் செய்ய அனுமதிக்க வேண்டும் என்று கோரி மனுதாரரால் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. முதல் <u>எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையில் கூறியுள்ள சங்கதிகளின் சுருக்கம் பின்வருமாறு:—</u>

மனு சட்டப்படியும், பொருண்மைகள் படியும் நிலைக்கத்தக்கது அல்ல. முதல் எதிர்மனுதாரரால் ஒப்புக் கொள்ளப்பட்ட சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க வேண்டும். முதல் மேல்முறையீட்டாளர் ஒத்துழைப்பு அளிக்காமல் இருந்து

வருகிறார். 2–வது மேல்முறையீட்டாளர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். வழக்கு நீண்டகாலமாக நிலுவையில் உள்ளது. எனவே தகுந்த உத்தரவு பிறப்பிக்க வேண்டும்.

4. இந்த மனுவில் இருதரப்பிலும் வாய் மொழி சாட்சியம் அளிக்கவில்லை மற்றும் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

5. <u>இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனைகள் யாதெனில்:–</u>

இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

6. <u>தீர்வு</u>:–

மனுதாரர்/2–வது மேல்முறையீட்டாளர் உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் கட்டளை 1 விதி 10 (1) (2) –ன்கீழ் மேல்முறையீட்டு வழக்கில் உள்ள முதல் மேல்முறையீட்டாளரை 26–வது எதிர்மனுதாரராக மாறுதல் செய்ய அனுமதிக்ககோரி மனு தாக்கல் செய்துள்ளார்.

7. மனுதாரர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தன் வாதுரையில் முதல் மேல்முறையீட்டாளர் மேல்முறையீட்டு வழக்கை நடத்துவதற்கும், 2–வது மேல்முறையீட்டாளருடன் ஒத்துழைப்பு அளிக்காமலும் இருந்து வருகிறார் என்றும், எனவே மேல்முறையீட்டு வழக்கில் உள்ள முதல் மேல்முறையீட்டாளரை வழக்கில் 26–வது எதிர்மனுதாரராக மாறுதல் செய்ய வேண்டும் என கூறினார்.

8. சேலம், முதன்மை சார்பு நீதிமன்றத்தால் இ.ம.எண்.198/2000 என்ற மனுவில் 29.04.2009–ம் தேதி பிறப்பிக்கப்பட்ட இறுதிநிலை தீர்ப்பாணையின்பேரில் இந்த மேல்முறையீட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேல்முறையீட்டு வழக்கு

எண்.34/2009–ல் 10.11.2010–ம் தேதி இந்நீதிமன்றத்தால் மேல்முறையீட்டு வழக்கு அனுமதிக்கப்பட்டு மறு விசாரணைக்காக விசாரணை நீதிமன்றத்திற்கு அனுப்ப உத்தரவிடப்பட்டது. அதன்பேரில் முதல் எதிர்மனுதாரர் வரதராஜ் என்பவர் மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தில் CMA.No.2687/2011 – என்ற மனுவை தாக்கல் செய்து, அந்த மனுவில் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்டு, அறிக்கையும், வரைபடமும் தாக்கல் செய்யப்பட்ட பிறகு அது குறித்து தரப்பினர்களுக்கு ஆட்சேபனை இருந்ததால் அது சம்மந்தமாக பரிசீலிக்க உத்தரவிடப்பட்டு வழக்கு இந்த நீதிமன்றத்திற்கு 22.12.2020 தேதிய உத்தரவுபடி திரும்ப விசாரணைக்காக அனுப்பப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் முதல் மேல்முறையீட்டாளர் விஜயலட்சுமி என்பவர் மனுதாரர்/2–வது மேல்முறையீட்டாளருடன் வழக்கை நடத்த ஒத்துழைக்கவில்லை என கூறப்பட்டது ஏற்கும்படியாக உள்ளது. எனவே, முதல் மேல்முறையீட்டாளரை வழக்கில் 26–வது எதிர்மனுதாரராக மாறுதல் செய்ய வேண்டியது அவசியம் ஆகின்றது. இந்நீதிமன்றத்தால் 30.08.2024 தேதிய நாட்குறிப்பில் புதிதாக நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட்டுள்ளார். ஏற்கனவே மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தால் CMA.No.2687/2011 – என்ற வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்ட்டு அறிக்கையும் வரைபடமும் தாக்கல் செய்யப்பட்டுள்ள சூழ்நிலையில் மீண்டும் இந்நீதிமன்றத்தால் புதிதாக நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்ய வேண்டியது இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. மேலும் இந்நீதிமன்றம் கீழ்க்கண்ட முன் தீர்ப்புரையில் கூறப்பட்டுள்ள கருத்துக்களை கவனத்தில் கொண்டது.

**2000 (III) CTC 78**

**Veppanathar alias Karuppannan and another -Vs- Kaliappan**

**Para. 17 –** In Paragraph 8 of the Order, lower Court found that the contention of respondent that the report is to be scrapped cannot be accepted. It also found against the respondent that the request for appointing second Commissioner after scrapping the report also cannot be accepted. Even if there is any deficiency or defect in the report, same commissioner could be asked to rectify the mistake.

மேற்கண்ட முன் தீர்ப்புரையில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் இந்த வழக்கின் சங்கதிகளுக்கு பொருந்துவதாக உள்ளது. எனவே, இந்நீதிமன்றத்தால் 30.08.2024 தேதிய நாட்குறிப்பில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை ரத்து செய்யவும், திரும்ப பெறவும் உத்தரவிட வேண்டியது அவசியமாகின்றது. மேற்கண்ட பரிசீலனைகளின்படி இந்த மனு அனுமதிக்கத்தக்கது என பிரச்சனையின்மீது தீர்வு காணப்படுகிறது.

9. முடிவில், மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. மேலும், 30.08.2024 தேதிய நாட்குறிப்பில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை ரத்து செய்யவும், திரும்ப பெறவும் உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11 ம் தேதியான இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

N RAMAKRISHNAN
Digitally signed by N RAMAKRISHNAN
Date: 2025.03.11 05:23:26 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,

சேலம்.

மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்: இல்லை
எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்: இல்லை

N RAMAKRISHNAN
Digitally signed by N RAMAKRISHNAN
Date: 2025.03.11 05:23:35 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.